**கஹடகஸ்திகிலிய பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கஹடகஸ்திகிலிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் உள்நாட்டு அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடனுக்காக செலுத்தப்பட்ட ரூபா 187,635 ஆன வட்டி, வருமானச் செலவுக் கணக்கில் உள்ளடக்கப்படாமையால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் கிடைத்த நிதி ஏற்பாட்டின் பேரில் பூர்த்தி செய்து பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 7,770,163 பெறுமதியான மூலதனச் செலவினம் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய ரூபா 865,725 ஆக முத்திரைக் கட்டணங்கள் ரூபா 496,775 என கணக்கீடு செய்யப்பட்டமையால் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 368,950 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 376,763 தொகையை மீள் நிரப்பும் போது வருமானமாக பதிவு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 17,222,234 கூட்டுத்தொகையான நிர்மாணக் கடன்கொடுத்தோர் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யாமை காரணமாக மூலதனச் செலவினம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 18,979,754 கூட்டுத் தொகையான நிர்மாணக் கடன்பட்டோர் மூலதனச் செலவினமாக கணக்கீடு

செய்யாமை காரணமாக மூலதனச் வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) பிரதேச சபைக் கட்டிடத்தின் நிர்மாண பெறுமதி ரூபா 34,342,085 என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் மொத்தக் கொடுப்பனவு பெறுமதி ரூபா 35,359,670 ஆக இருந்தமையால் காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 1,017,585 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2016 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்காக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த நீதிமன்றத் தண்டப்பணம் வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 57,500 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் மீதிகள் உரிய பேரேட்டு மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 211,026 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 37 கணக்கு விடயங்களுக்குரிய 2016 ஆம் ஆண்டின் மிகை திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் உள்ளடக்கப்பட்ட மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளுக்கு இடையே ரூபா 15,083,041 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 677,094 தொகையான கிடைக்க வேண்டிய 02 கணக்கு மீதிகள் மற்றும் ரூபா 108,011 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதி இனங்காணப்பட்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 8,790,461 தொகையான 03 கணக்கு விடயங்கள் திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் 177 ஆம் பிரிவு | சபையின் சேவை புரியும் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக உத்தேச திட்டமொன்றை தாபிப்பதற்கு உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | |

| | | |
|---|---|---|
| (i) | விதி 5.11 | சபைக்குச் சொந்தமான வழியில் காசு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக முறையான காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 33 | வீதவரி கொடுப்பனவை தவிர்ப்பு செய்யும் நபர்கள் தொடர்பாக பட்டியலொன்றும் ஆதனங்களை தடை செய்யும் பிடியாணை ஒவ்வொரு காலாண்டிலும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,694,977 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,963,457 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரிகளும் | 559,780 | 1,310,413 | 64,275 | 894,809 | 911,109 |
| வியாபார வரி | - | 600,000 | - | 737,700 | - |
| கழிவுப்பொருள் வரி | 77,078 | 385,000 | 9,000 | 385,000 | 68,078 |
| அனுமதிப் பத்திரங்கள் | - | 250,000 | - | 374,950 | - |
| விளம்பர பதாதைகள் | - | 300,000 | - | 353,000 | - |
| மொத்தம் | 636,858 | 2,845,413 | 73,275 | 2,745,459 | 979,187 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 559,780 தொகையான நிலுவை வீத வரியில் ஆண்டில் ரூபா 64,275 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த நிலுவை வீதவரி ரூபா 911,109 ஆன நிலுவை வீதவரியை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வீதவரி ரூபா 637,268 ஆக இருந்ததுடன் சபை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 559,780 ஆக இருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு இடையே ரூபா 77,488 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்ட போதிலும் அதற்கான காரணங்களை விளக்கமளிக்க செயலாளர் தவறியிருந்தார்.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,736,055 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 287,345 தொகையும் பெற வேண்டியதாகக் காணப்பட்டது.

### 2.2.4 கழிவுப்பொருள் கட்டணங்கள்

2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 77,078 ஆக நிலுவை கழிவுப்பொருள் கட்டண மீதியாக மீளாய்வாண்டில் ரூபா 9,000 அளவில் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 68,078 அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

## 03 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் விடயங்களை நிறைவேற்றுவதற்காக சபையால் சட்டத்தின் 122 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட உப விதிகள் பிறப்பிக்கப்பட்டு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ் விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டினால் சபையினால் மீண்டெழும் செலவினமாக ரூபா 34.1 மில்லியன் மற்றும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 9.6 மில்லியன் சபை நிதியத்திற்கு செலவினப் பொறுப்பொன்றாக இருந்த போதிலும் அதன் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் என்னவென்பது தொடர்பான இனங்காணும் பொருட்டு

செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

பொருளாதார பிரச்சினைகள் காணப்படும் சமய நிறுவனங்களில் 26 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,300,000 ஆன நிதி ஏற்பாடு மாகாண கலாச்சார அலுவல்கள் திணைக்களத்திலிருந்து கிடைத்திருந்த போதிலும் அச்செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சுற்றாடல் பிரச்சினைகள்**

சபை சேகரிக்கும் கழிவுப்பொருட்களில் உக்காத கழிவுப்பொருட்கள் பிளிசறு செயற்திட்டத்திற்கு அண்மையில் அரச காணியொன்றில் குழியொன்று தோண்டப்பட்டு இடப்பட்டு மாதாந்தம் அதன் சுற்றுப்புறத்திற்கு மண் போடப்படுவதாக குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் மழை காலங்களில் நீர் நிரம்புவதால் கழிவுப்பொருட்கள் சுற்றாடலுடன் சேர்வதால் பிரதேச வாசிகளுக்கு வெவ்வேறு சுகாதார சிக்கல்களுக்கு முகங்கொடுப்பதற்கு நேர்ந்துள்ளதுடன் உக்காத கழிவுப்பொருட்களை சுற்றாடலில் விடப்பட்டு எரிப்பதால் விஷ வாயுக்கள் வெளியேறி சுற்றாடலுக்கு சேதமொன்று இடம்பெறக்கூடுமென அவதானிக்கப்பட்டது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக சபை அறிந்து இருந்திருக்காமையால் சபைக்குரிய நோக்கங்கள், அவற்றை செயற்படுத்துவதற்கு தேவையான நிதி ஏற்பாடு, அதற்காக தேவையான பதவியணியினர் மற்றும் ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்கள் தொடர்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வருவன விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) புறநெகும செயற்திட்டத்தின் மூலம் திருத்த வேலைகள் செய்யப்பட்டு பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த சுற்றுலா விடுதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதான காசேடு, ஊழியர் கடன் பதிவேடு, முறைப்படி பேணப்படாமல் இருந்ததுடன் பதிவு செய்தல் பென்சிலால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

ரூபா 31,369 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் காணாமல் போயிருந்த போதிலும் அது தொடர்பாக நி.பி 104 முதல் 109 வரையான ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நட்டத்தை புத்தகத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

முறையான எதிர்வுகூறல் ஒன்று இல்லாமல் பாதீடு தயாரிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் 04 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 43 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையான

விலகலொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2015 மார்ச் 18 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் தாபனத்தின் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்காமல் இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | கொடுக்கல் வாங்கல்கள் முறையாக இனங்காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்படாமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | | நாளதுவரையாக பேணப்படாமை. |
| (இ) | திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம் | | உக்காத கழிவுப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படாமை. |
| (ஈ) | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | | நீண்டகாலமாக இருந்து வரும் மீதிகளை இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | உள்ளகக் கட்டுப்பாடு | i. | உள்ளகக் கணக்காய்வு முறைப்படி மேற்கொள்ளப்படாமை. |
| | | ii. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் கூட்டங்கள் உரிய திகதிகளில் நடாத்தப்படாமை. |